**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 344 நாள்: 30.07.2026

**அண்ணாநகர் மண்டலத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள் இன்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.**

இன்று (30.07.2026) மத்திய வட்டார துணை ஆணையாளர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி, அண்ணாநகர் மண்டலம், வார்டு-102க்குட்பட்ட அண்ணாநகர், எச். பிளாக் பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, 3ஆவது அவென்யூ பகுதியில் உள்ள இலவச ஒப்பனை அறை, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் தூய்மைப் பணிகள், வார்டு-99க்குட்பட்ட பிரிக்லின் சாலையில் தேங்கியுள்ள நீரினை மாநகராட்சிப் பணியாளர்கள் அகற்றும் பணி, அப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி, ஒப்பனை அறை, வார்டு-98க்குட்பட்ட சன்வெல் அடிக்குமாடி குடியிருப்புப் பகுதியில் உருவாகும் பெருமளவு கழிவுகளை தனித்தனியே பிரித்து வழங்குவது குறித்தும், வார்டு-96க்குட்பட்ட யுனைடெட் இந்தியா நகர், 2ஆவது பிரதான சாலையில் மேற்கொள்ளப்பட்டு வரும் மழைநீர் வடிகால் பணி உள்ளிட்ட பணிகளைப் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இந்த ஆய்வின் போது, மத்திய வட்டார துணை ஆணையாளர் அவர்கள், நடைபெற்று வரும் கட்டுமானப் பணிகளையும், மழைநீர் வடிகால் அமைக்கும் பணிகளையும் விரைந்து முடித்திடவும், ஒப்பனை அறையினைத் தூய்மையாகப் பராமரித்திடவும், சாலைகளில் மற்றும் தெருக்களில் அன்றாட தூய்மைப் பணிகளை சிறப்பாக மேற்கொள்ளவும் அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**